## கிறிஸ்தியல் படிப்பின் முக்கியத்துவம் (பாடம்-1)

1. கிறிஸ்டோஸ் + லாகியா (இரண்டு கிரேக்க வார்த்தை) கிறிஸ்துவைப் பற்றிய படிப்பு
2. இயேசு கிறிஸ்துவின் தன்மை, பணி, சிலுவையில் செய்த மீட்பு
3. அவர் உலகில் வருமுன்னர், வந்த பின்னர், இன்று பரலோகில் செய்யும் ஊழியத்தை பற்றி இதில் படிக்கிறோம்.
4. இயேசுவை சரியாக புரிந்து கொள்ள இது உதவுகிறது.
5. அவரைப்பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல் சரியாக இரட்சிப்பண்டை நடத்தும்.
6. இயேசு யார் என்றும் அவர் என்னச் செய்தார் என்பதையும் சரியாக அறியாத பட்சத்தில் மற்ற இறையியல் கோட்பாடுகள் தவறாகிவிடும்.
7. இயேசு கிறிஸ்துவின் மனிதத்தன்மையையும், தெய்வீகத்தன்மையையும் இதிலேயே புரிந்து கொள்கிறோம்.

   மனிதத்தன்மை – அவர் மரிப்பதற்காக

   தெய்வீகத்தன்மை – நம்முடைய பாவத்திற்கான கிரயத்தை செலுத்துவதற்காக
8. அவர் நூறு சதவீதம் தெய்வத்தில் தெய்வமானவர், மனிதனில் மனிதனானவர் என்று நாம் இந்த பாடத்தின் வழியாக அறிவதினால் விசுவாசியின் வாழ்வில் மாபெரும் தாக்கத்தை உண்டாக்குகிறது. ஒருவரை நேசிப்பதில் பெருகுகிறோம்.
9. அவருடைய பலதரப்பட்ட பெயர்களை நாம் இதில் பயில்வதால் அவர் எந்த அளவிற்கு என் வாழ்வில் சம்பந்தப்பட்டுள்ளார் அவரிடம் நான் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் என்ன என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. (எ.கா) நானே நல்ல மேய்ப்பன், சமாதான பிரபு
10. இயேசு கிறிஸ்துவின் நித்தியத் தன்மை இதன் வழியாகவே நிரூபிக்கப்படுகிறது.
11. இயேசு கிறிஸ்து உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே இருக்கிறார் என்பதை கிறிஸ்தியலில் வேதத்தின் முக்கியத்துவத்தையும் இயேசு கிறிஸ்துவின் முக்கியத்துவத்தையும் உலகம் இன்று இவ்வளவு தூரம் அறிந்திருக்காது.

## இயேசு கிறிஸ்துவின் பெயர்கள்

வேதாகமத்தில் கூறப்படுகிற ஒவ்வொரு பெயரும் ஒரு குறிப்பிட்ட அர்த்தமுடையதாக இருக்கிறதை காண முடியும். அது அவருடைய ஆள்தத்துவம், தன்மை, நடத்தை, குணவியல்புகளை வெளிப்படுத்துகிறது. இதனால் தான் வேதாகமத்தில் தெய்வத்துக்குப் பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் அறிந்திருக்கின்றோம். இதில் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்களையும் இப்பாடத்தில் நாம், அதின் அர்த்தங்களையும் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

### 1. இயேசு (JESUS)

மனிதனாக வந்த தெய்வத்துக்கு “இயேசு” என்று பெயரிடுவாயாக என்று தேவதூதனால் அறிவிக்கப்பட்டது. (மத்தேயு 1:21) “ஈசொஸ் (Lesous) எனும் இக்கிரேக்கப் பெயர், யோசுவா எனும் எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமாகும்.

வேதத்தில் “இயேசு” என்ற பெயரை சாதாரணமான ஒரு நபருக்கும் சுட்டப்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது. (யாத்திராகமம் 17:9, லூக்கா 3:29, கொலோசெயர் 4:11, அப்போஸ்தலர் 13:6, 7:45) எனினும் இரண்டாம் நூற்றாண்டளவில் இப்பெயர் எவருக்கும் கொடுக்கப்படவில்லை.

இயேசு என்ற பெயரின் அர்த்தம் “யெகோவா இரட்சிப்பவர்” என்பதாகும். இப்பெயர் அவருக்கு கொடுக்கப்படக் காரணம் அவர் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பதேயாகும். புதிய ஏற்பாட்டில் இயேசு என்ற பெயர் கிட்டத்தட்ட 600 தடவைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. கிறிஸ்து **(JESUS)**

கிறிஸ்து என்பது இயேசுவின் பணியைக் குறிக்கும் பெயராகும். “கிறிஸ்டொஸ்” எனும் கிரேக்கப் பெயரே தமிழில் “கிறிஸ்து” என வந்துள்ளது. எபிரேய மொழியில் இது மேசியா என்பதாகும். மக்களை அவர்களுடைய பாவங்களில் இருந்து மீட்டு இரட்சிப்பதற்காக பிதாவாகிய தேவனால் அபிஷேகிக்கப்பட்டு இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்ட இயேசுவையே நாம் அவருடைய பணியை அடிப்படையாய்க் கொண்டு கிறிஸ்து என கூறுகிறோம்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் மூன்று வகையான மக்கள் அபிஷேகம் பண்ணப்படுவது வழக்கம்.

- தீர்க்கதரிசிகள் - 1 இராஜாக்கள் 19:16, ஏசாயா 61:1
- ஆசாரியர்கள் - யாத்திராகமம் 28:41, லேவியாகமம் 8:12
- அரசர்கள் - நியாதிபதிகள் 9:8, 1 சாமுவேல் 16:12-13, சங்கீதம் 89:20, 1 இராஜாக்கள் 1:45, 2 இராஜாக்கள் 11:12

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவும் மூன்று பணிகளையும் செய்பவராக இருக்கிறார். தான் கிறிஸ்து என்பதை இயேசு ஏற்றுக்கொண்டார். (மத்தேயு 16:17, மாற்கு 14:61-62, யோவான் 4:26) இயேசுவே கிறிஸ்து என்பதே அப்போஸ்தலர்களுடைய பிரசங்கமாயிருந்தது. (அப்போஸ்தலர் 9:22, 17:3, 18:5, 18:28)

## 3. கர்த்தர் **(LORD)**

இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இன்னுமொரு பெயர் “கர்த்தர்” அல்லது “ஆண்டவர்” என்பதாகும். இது “கூரியொஸ்” எனும் கிரேக்க பதத்தின் தமிழாக்கமாகும். பவுலினுடைய நிருபங்களில் மட்டும் 200 தடவைகளுக்கு மேல், “இயேசு, கர்த்தர்” என்று அழைக்கப்பட்டுள்ளார்.

கூரியொஸ் எனும் பதம் கர்த்தர், எஜமான், ஆண்டவன், ஆள்பவன், சொந்தக்காரன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பதம் அரசர்களைக் குறிக்கவும், தெய்வத்தைக் குறிக்கவும் உபயோகிக்கப்பட்டது.

யெகோவா எனும் எபிரெய தெய்வப் பெயர் கிரேக்கத்தில் “கூரியொஸ்” என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே இயேசு கர்த்தர் என கூறும்போது அவர் யெகோவா, அவர் தெய்வம் என்றே நாம் அழைக்கின்றோம்.

## 4. தேவனுடைய குமாரன் **(SON OF GOD)**

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனப் புதிய ஏற்பாட்டில் பல தடவைகள் கூறப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். இயேசுவே பல தடவைகள் தன்னை இவ்வாறு கூறியுள்ளார். இதனால் இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்குப் பிறந்த பிள்ளை என நாம் கருதலாகாது. வேதாகமத்தில் ஒருவருக்கு பிறக்காத பிள்ளைகளும் அவருடைய பிள்ளைக்காக குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் நிதானித்து அறியலாம். (1 சாமுவேல் 3:16,26:17,21,25, நீதிமொழிகள் 7:1, 2 இராஜாக்கள் 16:7, நெகேமியா 12:28, 1 இராஜாக்கள் 20:35) இருவருக்கிடையேயுள்ள சிறப்பான உறவைக் காண்பிக்கவே இத்தகைய சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டுள்ளது. "புதிய ஏற்பாட்டில் இப்பதம் பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள சிறப்பான அந்நியோன்ய உறவைக் காண்பிக்கவே உபயோகிக்கப்பட்டுள்ளது."

வேதாகமமானது குமாரன் எனும் பதத்தை உருவக மொழியாகவும் உபயோகித்து உள்ளதை நாம் அறியலாம். (சங்கீதம் 89:22, மாற்கு 3:17, அப்போஸ்தலர் 4:36). இவை தன்மையை விளக்கும் உருவகங்களாகவே உள்ளன. எனவே இயேசு தேவனுடைய குமாரன் எனக்கூறும் போது அவர் தேவத்தன்மை உடையவர் என்றே நாம் கருதுகிறோம். தேவனுடைய குமாரன் எனும் பெயர் அவருடைய தேவத்துவத்தையே காண்பிக்கிறது. (பொட்னர்)

## 5. மனுஷகுமாரன் (SON OF MAN)

இயேசு கிறிஸ்து பல தடவைகள் தன்னை மனுஷகுமாரன் என கூறியுள்ளார். இரு இடங்களைத் தவிர மற்றைய சமயங்களில் எல்லாம் (80 தடவைகளுக்கு அதிகமாக) இயேசுவாலேயே இப்பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளது. சங்கீதப் புத்தகங்களில் சாதாரண மனிதனையும் (சங்கீதம் 8:4, 80:17) எசேக்கியேலுடைய புத்தகத்தில் 90 தடவைகளுக்கு அதிகமாக தீர்க்கதரிசியையும் குறிக்கும் வண்ணம் இப்பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் மனிதத்தன்மையையும் அவருடைய தீர்க்கதரிசனப் பணியையும் குறிக்கும் பெயராக இது உள்ளதாக சிலர் கருதுகின்றனர். எனினும் இயேசுவின் உபயோகம் இதுவல்ல என்பதை மறுப்பதற்கு இல்லை.

இயேசு கிறிஸ்து தனக்கு உபயோகித்த மனுஷகுமாரன் எனும் பெயர் தானியேல் 7:13-14 ஐ அடிப்படையாகக் கொண்ட மேசியா பெயராகும். இயேசு தான் மேசியா என்பதை நேரடியாக சொல்லாமல், அதை மறைமுகமாக இப்பெயரினூடாக அறிவித்தார். இதற்கு காரணம் அக்கால யூதர்கள் அரசியல் ரீதியான மேசியாவை எதிர்பார்த்திருந்தமையும், தான் மேசியா என்று வெளிப்பட்டால், அரசியல்ரீதியாக ஏற்படும் குழப்பங்களுமேயாகும். "மனுஷகுமாரன்" எனும் பெயர் தான் மேசியா பணிக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதனால், இயேசு மேசியா என்பதற்குப் பதிலாக இப்பெயரை உபயோகித்தார். (லெஸ்ஸல்) அவர் தன்னுடைய தன்மையையும் மேசியா பணியையும் தானியேல் 7:13-14ஐ அடிப்படையாய்க் கொண்டு இப்பெயரினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

## 6. தாவீதின் குமாரன்

இயேசு கிறிஸ்து தாவீதின் அரச பரம்பரையில் வந்தவர் என்பதைக் காண்பிக்க அவருக்கு தாவீதின் குமாரன் எனும் பெயரும் கொடுக்கப் பட்டுள்ளது. (மத்தேயு 9:27, 20:30, 15:22, 21:9,15, 12:23) இயேசு கிறிஸ்து யூதர்களுடைய ராஜா, அவர் தாவீதின் சிங்காசனத்துக்குரியவர்

என்பதை இப்பெயர் அறியத்தருகிறது. இதுவும் ஒரு மேசியா பெயராக இருக்கின்றது. தாவீதின் வம்சத்தில் வரும் மேசியாவையே யூதர் எதிர்பார்த்திருந்தனர்.

## 7. சர்வ வல்லமையுள்ள கர்த்தர்

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் (வெளி 1:8) என்று இயேசு கிறிஸ்துவின் தன்மையைக் குறித்து அறிந்துகொள்கிறோம். நிகழ்காலங்களில் இருக்கிறார், கடந்த காலங்களில் இருந்தார், வருங்காலங்களிலேயும் வருகிறவராக இருக்கிறார் என்பதினால் அவர் எல்லா காலங்களுக்கும் அப்பாற்பட்டவராய், எல்லா காலங்களிலும் கிரியை செய்கிறவராய் சர்வ வல்லமையுள்ள கர்த்தராக இருக்கிறார் என்பதை அறிந்து கொள்கிறோம்.

## 8. ஆதியும் அந்தமுமானவர்

நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். (வெளி 1:8) என்று இயேசு திருவுளம் பற்றுகிறார். எபிரெய மொழியின் முதல் எழுத்து அல்பா என்றும் கடைசி எழுத்து ஓமெகா என்றும் நாம் அறிந்திருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் காலங்களுக்கு அப்பாற்பட்டவராய் தம்மாலே தாம் சகலத்தையும் தாங்குகிறவராயும் ஆளுகை செய்து நடத்துகிறவராயும் இருக்கிறார். இதுதான் அவருடைய துவக்கம் என்றும், இதுதான் அவருடைய முடிவு என்றும் சொல்லயியலாததிலிருந்து அவருடைய நித்தியதுவத்தை அறிந்து கொள்கிறோம்.

## 9. மகா பிரதான ஆசாரியர்

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்கு போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் என்று எபிரெயர் 4:14 வாசிக்கின்றோம். பழைய ஏற்பாட்டில் பிரதான ஆசாரியர் தன்னுடைய பாவங்களுக்காகவும் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், பலி செலுத்தப்பட்ட மிருகத்தினுடைய இரத்தத்தை எடுத்துக்கொண்டு, வருஷத்திற்கு ஒருமுறை ஆசாரிப்பு கூடாரத்துக்குள் சென்று பாவ நிவிர்த்தி செய்கிறதை பார்க்கின்றோம். ஆனால் நம்முடைய கிறிஸ்து நமக்காக தன்னை நித்திய பலியாகி கொடுத்து, தன்னுடைய மாசற்ற குற்றமில்லாத விலையேறப்பட்ட இரத்தத்தினால் நித்திய மீட்பை நமக்கு தந்திருக்கிறார். மட்டுமல்லாமல் பரலோகில் பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து நமக்காக பரிந்து பேசுகிற நல்ல பிரதான ஆசாரியராக கிறிஸ்து இருக்கிறார்.

## 10.இயேசுகிறிஸ்து தன்னை தேவனென்று கூறியிருக்கிறாரா?

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு கூறிய போது, யூதர்கள் அவர்மேல் கல்லெறிய கற்களை எடுத்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு நான் உங்களுக்குள்ளே நடப்பித்த எந்த கிரியைகளின் நிமித்தம் என்மேல் கல்லெறிய முற்படுகிறீர்கள் என்று கேட்ட பொழுது, நற்கிரியைகளின் நிமித்தம் அல்ல நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவனென்று சொல்லுகிறதினாலேயே என்று கூறினார். நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு கூறியதின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து தான் யூதர்கள் இப்படி செய்ய முற்பட்டார்கள்.

யோவான் 14:6ல் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன் என்று இயேசு கூறுகிறதிலிருந்து, இயேசு பிதாவாகிய தேவனுக்கு ஒப்பானவராய், நாமும் தேவனுடைய பிள்ளைகள் என்கிற மேலான உன்னத

நிலையில் ஆசீர்வதிக்கப்படும்படி அவர் வழியாக சத்தியமாக ஜீவனாக இருக்கிறார் என்பதை அறிந்து கொள்கிறோம்.

கேள்விகள்

1. கிறிஸ்தியல் பாடத்தை படிப்பதன் முக்கியத்துவம் என்ன? நாம் ஏன் கிறிஸ்தியல் பாடத்தை படிக்க வேண்டும் என்பதைப் பற்றி இப்பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்டதை எழுதுக?
2. கிறிஸ்தியல் பாடத்தின் மூலமாக நீங்கள் அறிந்துகொண்ட கிறிஸ்துவின் நாமங்களைப் பற்றி கூறுக? இதில் கிறிஸ்து என்கிற நாமத்தில் இருக்கிற மூன்று விதமான அபிஷேகத்தைப் பற்றியும் நீங்கள் கற்றுக்கொண்டதை விளக்கி கூறுக?
3. தான் தேவன் என்பதை கிறிஸ்து வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிற வேதபகுதிகளையும் அதின் விளக்கங்களையும் இப்பாடத்தில் கற்றுக்கொண்டதிலிருந்து குறிப்பிடுக?
4. கிறிஸ்து நூறு சதவீதம் மனுஷனாகவும், நூறு சதவீதம் தேவனாகவும் வெளிப்பட்டதற்கான முக்கிய காரணங்களை கூறுக?